## மார்ச் - 31 - வெள்ளி
### புனித பெஞ்சமின்
### “அவருடைய நீதி நெறிகள் அவர்களுக்குத் தெரியாது” திபா 147:20

-----------------------------------------------------------------------------------------------------------

### முதல் வாசகம்: ஞான ஆகமம் 2: 1,12 – 22

இறைப்பற்றில்லாதவர்கள் தவறாகக் கணித்து உள்ளத்தில் பின்வருமாறு சொல்லிக் கொண்டார்கள் ”நீதி மான்களைத் தாக்கப் பதுங்கியிருப்போம் ஏனெனில் அவர்கள் நமக்குத் தொல்லையாய் இருக்கிறார்கள் நம் செயல்களை எதிர்க்கிறார்கள் திருச்சட்டத் திற்கு எதிரான பாவங்களுக்காக நம்மைக் கண்டிக்கிறார்கள். நற்பயிற்சியை மீறிய குற்றங்களை நம்மீது சுமத்துகிறார்கள். கடவுளைப்பற்றிய அறிவு தங்களுக்கு உண்டு என அவர்கள் பறைசாற்றுகிறார்கள் ஆண்டவரின் பிள்ளைகள் எனத் தங்களை அழைத்துக் கொள்கிறார்கள். அவர்களது நடத்தையே நம் எண்ணங்களைக் கண்டிக்கிறது. அவர்களைப் பார்ப்பதே நமக்குத் துயரமாய் உள்ளது. அவர்களது வாழ்க்கை மற்றவர் வாழ்க்கை யினின்று வேறுபட்டது. அவர்களுடைய வழிமுறைகள் மாறுபட்டவை. இழிந்தோர் என நம்மை அவர்கள் எண்ணுகிறார்கள் தூய்மையற்ற பொருளினின்று ஒதுங்கிச் செல்வதுபோல நம்முடைய வழிகளினின்று விலகிச் செல்கிறார்கள் நீதிமான்களின் முடிவு மகிழ்ச்சிக்குரியது எனக் கருதுகிறார்கள் கடவுள் தம் தந்தை எனப் பெருமை பாராட்டுகிறார்கள். அவர்களுடைய சொற்கள் உண்மையா எனக் கண்டறிவோம் முடிவில் அவர்களுக்கு என்ன நிகழும் என ஆய்ந்தறிவோம். நீதிமான்கள் கடவுளின் மக்கள் என்றால், அவர் அவர்களுக்கு உதவி செய்வார் பகைவரிடமிருந்து அவர்களை விடுவிப்பார். அவர்களது கனிவினைக் கண்டு கொள்ளவும், பொறுமையை ஆய்ந்தறியவும், வசைமொழி கூறியும் துன்புறுத்தியும் அவர்களைச் சோதித்தறிவோம். இழிவான சாவுக்கு அவர்களைத் தீர்ப்பிடுவோம் ஏனெனில் தங்கள் வாய் மொழிப்படி அவர்கள் பாதுகாப்புப் பெறுவார்கள். இறைப்பற்றில் லாதவர்கள் இவ்வாறு எண்ணி நெறி தவறிச்சென்றார்கள். அவர்களின் தீயொழுக்கமே அவர்களைப் பார்வையற்றோர் ஆக்கிவிட்டது. அவர்கள் கடவுளின் மறைவான திட்டங்களை அறியவில்லை தூய வாழ்வுக்குக் கைம்மாறு உண்டு என்று நம்பவில்லை மாசற்றவர்களுக்குப் பரிசு கிடைக்கும் என்று உய்த்துணரவில்லை.

**பதில்பாடல்:** உடைந்த உள்ளத்தோருக்கு அருகில் ஆண்டவர் இருக்கிறார்

### நற்செய்தி: யோவான் 7: 1-2. 10. 25-30

இயேசு கலிலேயாவில் நடமாடி வந்தார். யூதர்கள் அவரைக் கொல்ல வழிதேடிக் கொண்டிருந்ததால் அவர் யூதேயாவில் நடமாட விரும்பவில்லை. யூதர்களின் கூடார விழா அண்மையில் நிகழவிருந்தது. தம் சகோதரர்கள் திருவிழாவிற்குப் போனபின் இயேசுவும் சென்றார். ஆனால் அவர் வெளிப்படையாக அன்றி மறைவாகச் சென்றார். எருசலேம் நகரத்தவர் சிலர், ”இவரைத்தானே கொல்லத் தேடுகிறார்கள்? இதோ! இங்கே இவர் வெளிப்படையாய்ப் பேசிக்கொண்டிருக்கிறாரே! யாரும் இவரிடம் எதுவும் சொல்லவில்லையே! ஒருவேளை இவரே மெசியா என்று தலைவர்கள் உண்மையாகவே உணர்ந்துகொண்டார்களோ? ஆனால் மெசியா எங்கிருந்து வருவார் என்பது யாருக்கும் தெரியாமல் அல்லவா இருக்கும்! இவர் எங்கிருந்து வருகிறார் என்பது நமக்குத் தெரியுமே” என்று பேசிக் கொண்டனர். ஆகவே கோவிலில் கற்பித்துக் கொண்டிருந்தபோது இயேசு உரத்த குரலில், ”நான் யார்? நான் எங்கிருந்து வந்தேன் என்பவை உங்களுக்குத் தெரியும். ஆயினும் நானாக வரவில்லை. என்னை அனுப்பியவர் உண்மையானவர். அவரை உங்களுக்குத் தெரியாது. எனக்கு அவரைத் தெரியும். நான் அவரிடமிருந்து வருகிறேன். என்னை அனுப்பியவரும் அவரே” என்றார். இதைக் கேட்ட அவர்கள் இயேசுவைப் பிடிக்க முயன்றார்கள். எனினும் அவருடைய நேரம் இன்னும் வராததால் யாரும் அவரைத் தொடவில்லை.

**தியானம்:** வெற்றிவீரரான இயேசு சாவுக்கு அஞ்சவில்லை. இருப்பினும், தற்கொலை உணர்வுடன் வாழ்ந்தவருமல்லர். எனவேதான், ”யூதர்கள் அவரைக் கொல்ல வழி தேடிக்கொண்டிருந்ததால் அவர் யூதேயாவில் நடமாட விரும்பவில்லை. அவரது சீடர்கள் எருசலேம் திருவிழாவுக்குச் சென்றபின் இயேசுவும் எருசலேமுக்குச் சென்றார் ”வெளிப்படையாக அன்றி மறைவாகச் சென்றார்” என்று யோவான் நற்செய்தியாளர் தெரிவிக்கின்றார். இயேசுவின் போதனையில்: இயேசு தன்னைக் கடவுளிடமிருந்து வந்ததாகச் சொன்னது. அடுத்ததாக யூதர்களுக்கு கடவுள் யார்? எனப்படும் இரண்டு முக்கிய செய்திகளுமே, யூதர்களுக்கு அதிர்ச்சியை மட்டுமல்ல, எரிச்சலையும், கோபத்தையும் கொண்டு வந்திருக்கலாம். மக்கள் நடுவில் எவ்வளவுதான் புதுமைகள் செய்தாலும், அறிவார்ந்த முறையில் பேசினாலும், அதிகாரத்தோடு போதித்தாலும் மக்களின் உள்ளத்தில் தான் ‘மெசியா’ என்ற உண்மையை உரிய முறையில் விதைக்கவில்லையே என்று இயேசு எப்போதும் சோரவில்லை. அவ்வாறே, தன்னுடைய ஒவ்வொரு வார்த்தைகளும் தவறாகத்திரிக்கப்பட்டு குற்றசாட்டுக்களை அடுக்கி, ஏளனமாக, இழிவாக, பொறாமை உணர்வோடு பார்க்கும் எதிரிகளைக்கண்டு இயேசு பயப்படவுமில்லை. தன்னுடைய இலக்கு நிறைவேறும்வரை எதைப்பற்றியும் கவலைப்படாமல் உறுதியாக இருந்ததனை நற்செய்தி தெளிவுபடுத்துகின்றது. தடைகளைத்தாண்டி தொடர்ந்து முன்னேறிய இயேசுவுக்கு நேசக்கரம் நீட்டியவர்கள் அவருடைய உறவினர்களோ, சீடர்களோ அல்ல, மாறாக, தந்தையாகிய கடவுள் மட்டும்தான். தந்தையாகிய கடவுளைப்பற்றிக்கொண்டு துணிவோடு நடந்து தனது இலக்கை அடைகிறார்.